**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC. Case No.44/2020**
**Sessions :**
**Deposition of Witness for : PW 11,** LW10

| | |
|---|---|
| Name | திரு.வேலாயுதம் |
| Father's/Husband Name | திரு. |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 21st day of February 2024.**

(எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**முதல் விசாரணை,**

1. நான் தற்போது ஒரத்தி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபரிந்து வருகிறேன். .

2. கடந்த 27.2.2017ம் தேதி செய்யூர் காவல் நிலையத்தில் தலைமை காவலர் 1219 ஆக பணிபுரிந்தபோது செய்யூர் காவல் நிலைய குற்ற எண்.1100/2016 வழக்கு சம்பந்தப்பட்ட காவல் அழைப்பாணையை காவல் ஆய்வாளர் என்னிடம் ஒப்படைத்து அந்த அழைப்பாணையை லத்தூர் கிராமத்தில் வசிக்கும் இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட தீனதயாளன் என்பவரிடம் கொடுத்து அத்தாட்சி பெற்று வருமாறு என்னை காவல் ஆய்வாளர் பணிக்கப்பட்டார்.

அதன் பேரில் அந்த அழைப்பாணையை பெற்று நான் லத்தூர் கிராமம் முதல் தெருவில் வசிக்கும் தீனதயாளன் என்பவரிடம் நேரிடையாக அழைப்பாணையை கொடுத்தேன். தீனதயாளன் அவர்கள் அழைப்பாணையை என்னிடமிருந்து வாங்கி படித்து பார்த்துவிட்டு அதை வாங்க மறுத்து என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்.

நான் அந்த அழைப்பாணையை எடுத்துக்கொண்டு காவல் ஆய்வாளரிடம் நடந்த விவரங்களை கூறி அழைப்பாணையை காவல் ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். என்னிடம் காட்டப்படும் தீனதயாளன் என்பவர் கொடுத்த அழைப்பாணை ஆகும். **(அந்த அழைப்பாணை அ.சா.ஆ.18ஆக குறியீடு செய்யப்படுகிறது)** இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை,**

ஏதிரி சம்மனை சார்பு செய்தபோது வாங்க மறுத்ததை நிரூபிக்க சாட்சிகள் யாரிடரும் கையொப்பம் பெற்றேனா என்றால் இல்லை. நான் உண்மையிலேயே எதிரியிடம் சம்மனை சார்பு செய்ய சென்றிருந்தால் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றிருப்பேன் என்றாலும் அவ்வாறு செல்லாததால் சட்டப்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெறவில்லை என்றால் சரியல்ல.

சம்மனை எதிரியிடம் சார்பு செய்வதற்கு முன்பு முதல்தகவல் அறிக்கையில் எதிரியின் விலாசத்தை பார்வையிட்டேனா என்றால் இல்லை. சம்மனில் குறிப்பிட்டிருந்த விலாசத்தை மட்டும் தான் பார்வையிட்டேன்.

சம்மனை எதிரி பெற மறுத்ததாக குறிப்பிட்டுள்ள நிலையில் ஆய்வாளரின் உத்தரவை பெற்று தபால் மூலம் அந்த சம்மனை சார்பு செய்ய முயற்சி எதாவது எடுத்தேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எதிரிக்கு எந்த சம்மனையும் நான் சார்பு செய்ய முயற்சி செய்யவில்லை என்றாலும் அய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவருக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறுவிசாரணை, இல்லை**

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate
**Cheyyur**